மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டுக்கு முன்பு 1 : 6 என்ற முறையில், Male Nurse ஒன்று, Female Nurse 6 என்ற அந்த விகிதாசாரத்தில் அவர்களை நாம் தேர்வுக்காக எடுத்துக்கொண்டிருந்தோம். ஆனால் அதற்குப் பிறகு தேர்வு இல்லை என்று 1958 ஆம் ஆண்டுக்குப் பிறகு தேவையில்லை என்று அன்றைய அரசாங்கம் முடிவு எடுத்தது. இப்போது சில ஆண்டுகளாக குறிப்பிட்ட சில டிபார்ட்மென்டுகளுக்காக, Mental Hospital, Prisons, Sexually transmitted diseases போன்ற இந்தமாதிரியான பகுதிகளுக்கு மேல் நர்ஸ் இருந்தால் நன்றாக இருக்கும், பயனுள்ளதாக இருக்கும் என்ற ஒரு கருத்து தெரிவித்ததின் அடிப்படையில், நாம் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகவே மீண்டும் தமிழக சர்க்கார் மேல் நர்ஸ்களைக் கொஞ்சம் கொஞ்சமாக, படிப்படியாக, தேவைக்கேற்ப அனுமதி கொடுப்பது என்ற முடிவை எடுத்திருக்கிறது.

வேலூர் மத்திய சிறைச்சாலையிலுள்ள மகளிர் பிரிவு.

*190 (*வினா 17633)* திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் மத்திய சிறைச்சாலை மகளிர் பிரிவில் நீண்ட நாட்களாகப் பெண் மருத்துவர் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம். காலியாக உள்ள இப் பணியிடம் நிரப்பப்படும் வரை மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், வேலூர் மத்திய பெண்கள் சிறையில் பெண் மருத்துவர் நீண்டகாலமாக இல்லை என்பதை அமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது நீண்ட நாட்களாக காலியாக இருக்கிறது. மாற்று ஏற்பாடு செய்யப்பட்டும், சிகிச்சை அளிக்க வாய்ப்பு இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்பது நியாயமான கேள்வி. உடனடியாகப் போட வேண்டும் என்று நான் உத்தரவிட்டு இருக்கிறேன். வெகுவிரைவிலே செயல்படுத்தப்படும். அது மீண்டும் செயல்படுத்தப்படாமல் இருந்தால் எனக்கு அதைப் பற்றித் தெரிவித்தால், உடனடியாக உத்தரவு போடுவதற்குச் சரியாக இருக்கும்.

1984 மார்ச் 9]

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்று ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி மாற்று ஏற்பாடு செய்யப்பட்டும் இன்றைய தினம் வரையில் சிகிச்சை அளிக்காத நிலை இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நமக்கு சில நேரங்களில் பற்றாக் குறை ஏற்படுகின்றபோது, சர்வீஸ் கமிஷன் மூலமாக நாம் படிப்படியாக அந்தந்த காலி இடங்களை நிறைவு செய்து கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையிலே ஒரு பெண் மருத்துவருக்கு அங்கே நாம் வாய்ப்புக் கொடுக்கிறோம். எனவே என்ன பிரச்சினை என்றால், சர்வீஸ் கமிஷனைக் கேட்கிறபோது அவர்கள், 900, 901 என்று இப்படி பிரியாரிட்டி பேசிஸில் கொடுக்கிறார்கள். அந்த பிரியாரிட்டி பேசிஸில் வருகிறபோது தான் நாம் நிரப்ப முடியும். மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்தின் அடிப்படையில் பெண் டாக்டர் யாராவது இருந்தால் அவர்களைப் போடுவதற்கு மீண்டும் பரிசீலனை செய்கிறோம்.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் பிளாஸ்டிக் சர்ஜரி மற்றும் பீடியாட்ரிக் பிரிவுகள் அமைப்பதற்கான கோரிக்கை.

191 (*வினா 20446) திரு. சி. கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 'பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட்' மற்றும் 'பீடியாட்ரிக் யூனிட்' அமைக்கக் கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட்டுக்கு கோரிக்கை ஏதும் இல்லை. பீடியாட்ரிக் சர்ஜரி யூனிட் அமைக்க கோரிக்கை வந்துள்ளது.

(ஆ) பீடியாட்ரிக் சர்ஜரி பிரிவு ஆரம்பிக்கும் கருத்துரு 1984—85-ம் பகுதி 2 திட்டத்தில் சேர்க்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.